பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

04 07 2026 SATURDAY 12.40 PM

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சிவில் விமான போக்குவரத்துத்துறையின் வளர்ச்சிக்கு மாற்றியமைக்கப்பட்ட உடான் திட்டம் உத்வேகம் அளிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. கூட்டுறவுத்துறையின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. அரசியல் சாசனத்திற்கு உட்பட்டுதான் தேர்தல் ஆணையம் அனைத்துப் பணிகளையும் மேற்கொண்டு வருவதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு **Gyanesh Kumar** கூறியுள்ளார்.

4. ஈரான் நாட்டின் மறைந்த உயரிய தலைவர் **Ayatollah Seyyed Ali Khamenei**-ன் ஆறுநாள் இறுதிச்சடங்குகள் இன்று டெஹ்ரானில் தொடங்கியது.

5. உலக பாரா வில்வித்தைப் போட்டியில் இந்தியா இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

சிவில் விமான போக்குவரத்துத்துறையின் வளர்ச்சிக்கு மாற்றியமைக்கப்பட்ட உடான் திட்டம் உத்வேகம் அளிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஜோத்பூரில் இந்த திட்டத்தை இன்று தொடங்கிவைத்த அவர், இதுதொடர்பாக வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

விமானங்களில் பயணம் மேற்கொள்வோரின் எண்ணிக்கையை அதிகரிக்க இந்த மாற்றியமைக்கப்பட்ட திட்டம் உதவிடும் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை பயன்படுத்தப்படாமல் உள்ள **100** விமான நிலையங்களை பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கும் இந்த திட்டம் வகை செய்யும் என்று திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்ச்சியில், ஜோத்பூர் விமான நிலையத்தின் புதிய முனையத்தையும் பிரதமர் திறந்துவைத்தார்.

<<<<<<>>>>>>

அரசியல் சாசனத்திற்கு உட்பட்டுதான் தேர்தல் ஆணையம் அனைத்துப் பணிகளையும் மேற்கொண்டு வருவதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு **Gyanesh Kumar** கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற ஊடகப்பிரிவு அதிகாரிகளுக்கான மாநாட்டில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

சமூக வலைதளங்களில் தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் குறித்து தவறான தகவல்கள் பரப்பப்படுவதை தடுப்பதற்கு ஊடகப்பிரிவு அதிகாரிகள் கூடுதல் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

அண்மையில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல்களில் வாக்குப்பதிவு சதவீதம் அதிகரித்துள்ளது தேர்தல் ஆணையத்தின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை எடுத்துரைப்பதாக உள்ளது என்றும் திரு **Gyanesh Kumar** தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

இருபது சதவீத எத்தனால் கலந்த பெட்ரோல் பயன்பாடு தொடர்பாக பரப்பப்படும் தவறான தகவல்களை பொதுமக்கள் நம்ப வேண்டாம் என்று மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக, இந்திய எண்ணெய் கழகத்துடன் இணைந்து வாகன ஆராய்ச்சி சங்கம் மேற்கொண்ட சோதனைகளில் எதிர்மறையான எந்த தகவலும் கிடைக்கப்பெறவில்லை என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

40 ஆயிரம் கிலோமீட்டர் தொலைவிற்கு நான்கு சக்கர வாகனங்களிலும், 20 ஆயிரம் கிலோமீட்டர் தொலைவிற்கு இருசக்கர வாகனங்களிலும் இந்த சோதனை நடத்தப்பட்டதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

பாகிஸ்தானிலிருந்து செயல்படும் 23 பேரை தீவிரவாதிகள் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

இதற்கான அறிவிக்கையை உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

சட்ட விரோத செயல்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக உள்துறை அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>>

அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ், தமிழகத்தின் சேலம் ரயில்வே கோட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சிப்பணிகளை விரைந்து நிறைவேற்றுமாறு மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இன்று சேலம் ரயில் நிலையத்தில் இதுகுறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டு பேசுகையில் இதற்கான அறிவுறுத்தலை அவர் வழங்கினார்.

மேட்டுப்பாளையம், நாமக்கல் ரயில் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சித் திட்டப்பணிகளின் தற்போதைய நிலை குறித்தும் டாக்டர் எல். முருகன் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

<<<<<<>>>>>>

சத்தீஸ்கட்டில் புதுமை கண்டுபிடிப்புகளுக்கும், தொழில்நுட்ப பயன்பாட்டிற்கும் ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு **Vishnu Deo Sai** கூறியுள்ளார்.

இன்று ராய்பூரில் மாநில அமைச்சர்கள் பங்கேற்ற இதுதொடர்பான பயிலரங்கை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

அரசு திட்டங்களின் பலன்கள் மக்களுக்கு விரைவாக சென்றடைவதில் தகவல் தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிப்பதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மத்தியப்பிரதேசத்தில் தீ விபத்துகள் ஏற்படாமல் தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகளை அம்மாநில அரசு தீவிரப்படுத்தியுள்ளது.

முக்கிய அரசு அலுவலக வளாகங்களில் தீயணைப்புத்துறை பாதுகாப்பு சோதனைகளை மேற்கொண்டு வருவதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

போபால் அருகே முறையான தீ பாதுகாப்பு நெறிமுறைகளை பின்பற்றாத இரண்டு பயிற்சி நிறுவனங்களுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

விவசாயிகள், மகளிர் மற்றும் சிறு-குறு தொழில்முனைவோரின் மேம்பாட்டில் கூட்டுறவு அமைப்புகள் முக்கிய பங்கு வகிப்பதாக குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

சர்வதேச கூட்டுறவு தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி வெளியிட்டுள்ள செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நீடித்த வளர்ச்சிக்கும் கூட்டுறவுத்துறை உதவி வருவதாக திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

இந்நாளையொட்டி, மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித் ஷா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கூட்டுறவுத்துறையின் வளர்ச்சிக்காக நிறைவேற்றப்பட்ட திட்டங்களை பட்டியலிட்டுள்ளார்.

கூட்டுறவு பல்கலைக்கழகங்கள், நவீன பயிற்சி மையங்கள் போன்றவை இதில் அடங்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கூட்டுறவுத்துறையின் வளர்ச்சியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தனி கவனம் செலுத்தி வருவதாகவும் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

சுவாமி விவேகானந்தரின் நினைவுதினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி மற்றும் மத்திய அமைச்சர்கள் பலர் அன்னாருக்கு புகழாரம் சூட்டியுள்ளனர்.

<<<<<<>>>>>>

அருணாச்சலப்பிரதேசத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அம்மாநிலத்திற்கு உட்பட்ட பல்வேறு கிராமப்புற பகுதிகள் முழுமையாக துண்டிக்கப்பட்டுள்ளதாக பேரிடர் மேலாண்மைத்துறை தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஹெலிகாப்டர் மூலம் உணவுப் பொருட்கள் விநியோகம் செய்யப்படுவதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பல்வேறு இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

ஈரான் நாட்டின் மறைந்த உயரிய தலைவர் **Ayatollah Seyyed Ali Khamenei-**ன் ஆறுநாள் இறுதிச்சடங்குகள் இன்று தொடங்கியது.

டெஹ்ரானில் நடைபெற்றுவரும் இறுதிச்சடங்கில் லட்சக்கணக்கானோர் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்ப்பதால் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

இந்தியாவின் சார்பில் பீகார் ஆளுநர் லெப்டினன்ட் ஜெனரல் திரு **Syed Ata Hasnain** மற்றும் வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு **Pabitra Margherita** இதில் பங்கேற்றுள்ளனர்.

<<<<<<>>>>>>

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட வெனிசுலாவுக்கு குறித்த நேரத்தில் உதவிகள் வழங்கிய இந்தியாவிற்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

அந்நாட்டில் இந்திய ராணுவத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள தற்காலிக மருத்துவமனையை பார்வையிட்ட வெளியுறவு அமைச்சர் திரு **Yvan Gil,** குறிப்பாக பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு வெனிசுலா மக்கள் நன்றிக்கடன்பட்டிருப்பதாக கூறினார்.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு **24** மணிநேரமும் இந்த முருத்துவமனையில் இலவசமாக சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாள்தோறும் **400-**க்கும் மேற்பட்டோர் இந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் திரு **Yvan Gil** தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

விளையாட்டுச் செய்திகள்

உலக பாரா வில்வித்தைப் போட்டியில் இந்தியா இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.

செக் குடியரசில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் **Harvinder Singh - Vijay Sundi** இணையும், மகளிர்

இரட்டையர் பிரிவில் **Bhawana - Pooja** இணையும் தங்கப் பதக்கம் வென்றன.

இப்போட்டியில இந்தியா இதுவரை **4** தங்கம், **2** வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

-------------

**20** வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

தாய்லாந்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின், மகளிர் **76** கிலோ எடைப்பிரிவில் காஜல் தங்கப் பதக்கத்தையும், **72** கிலோ எடைப்பிரிவில் மனீஷா வெள்ளிப் பதக்கத்தையும் வென்றனர்.

--------------

மும்பையில் நடைபெற்ற சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் தன்வீ கன்னா பட்டம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், **8-11, 2-11, 12-10, 11-9, 11-7** என்ற செட் கணக்கில், எகிப்தின் **Farida Walid**-ஐ வென்றார்.

-------------

ஆசிய ஜூனியர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப் பதக்கம் வென்றது.

பாங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

-------------

**Cary** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Niki Kaliyanda Poonacha** — தாய்லாந்தின் **Pruchya Isaro** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

----------------

இந்தியா - இங்கிலாந்து இடையேயான இரண்டாவது ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று மான்செஸ்டரில் நடைபெறுகிறது.

ஐந்து போட்டிகளை கொண்ட இந்த தொடரின் முதல் ஆட்டம் மழையினால் கைவிடப்பட்டது.

-------------

ஹம்பன்தோட்டாவில் நடைபெற்றுவரும் இந்தியாவுக்கு எதிரான முதலாவது இளையோர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், முதலில் பேட் செய்து வரும் இலங்கை சற்றுமுன்வரை **37** ஓவரில், **3** விக்கெட் இழப்பிற்கு **181** ரன் எடுத்துள்ளது.

-------------

**Galle-**ல் நடைபெற்றுவரும் இலங்கை ஏ அணிக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம்

**நாளான இன்று இந்தியா ஏ அணி தனது முதல் இன்னிங்சில் சற்றுமுன்வரை 2 விக்கெட் இழப்பிற்கு 343 ரன் எடுத்துள்ளது.**

**-------------**

**புனேயில் நடைபெற்று வரும் சர்வதேச செஸ் போட்டியின் 4வது சுற்று முடிவில் இந்தியாவின் Abijeet Gupta முதல் இடத்தில் உள்ளார்.**

**-------------**

**உலகக் கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டி இத்தாலியில் தொடங்கியது.**

**<<<<<<END>>>>>>**